**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.8/2021**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குகன் | மதம் | : இந்து |
| த/பெ | : சுந்தரமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 39 | கிராமம் | : பாகசாலை |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

27.03.2026

<u>**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 1, 3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

6. 25.07.2005ல் சுப்பிரமணிய பிள்ளை மற்றும் பலர் சேர்ந்து எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் எனது தாயார் கையெழுத்து செய்துள்ளாரா என்றால் செய்துள்ளார். புல எண்.48/5D, 48/5C, 48/6A ஆகிய 3 புல எண்களுக்குதான் ஆவணம் எழுதப்பட்டதா என்றால் எனக்கு அது தெரியாது. மின் இணைப்பிற்காக மட்டும்தான் எழுதி கொடுக்கப்பட்டது. கன்னியம்மாள் சுப்பிரமணிய பிள்ளைக்கு என்ன உறவு என்றால் தாயார் ஆவார். சுப்பிரமணிய பிள்ளை தனது தகா நிலை செல்வாக்கை பயன்படுத்தி தவறான வழியில் 29.04.2004ல் ஒரு பத்திரம் எழுதினார் என்றால் அப்படி எழுதவில்லை. அதனால் 29.04.2004ம் தேதியிட்ட ஆவணமே சட்டப்படி செல்லாது என்றாலும் அது நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. நடைமுறைக்கு வந்தது. தாந்தோனிபிள்ளை எந்த ஆவணமும் எழுதாமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

7. தாந்தோனிபிள்ளை இறந்த பின்பு கன்னியம்மாளுக்கு தனிப்பட்ட உரிமை எதுவும் வரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு கூட்டு பங்குதாரர்கள் என்றாலும் இதுவரை பாகமே ஆகவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் சுப்பிரமணிய பிள்ளை, கிருஷ்ட பிள்ளை, ரங்கபிள்ளை

வாரிசுகளை சேர்க்காமல் என் தாயார் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 13 எதற்கு தாக்கல் செய்தேன் என்றால் பயிர்கடன் தள்ளுபடி ஆனதை காட்ட தாக்கல் செய்தேன். வா.சா.ஆ 13ல் புல எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் அம்மாவிற்கு முறையாக செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் சொத்து வராத நிலையில் நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

8. என் அம்மாவிற்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1985 ஆகும். வா.சா.ஆ 11 ஆவணம் இந்த வழக்கிற்காக நானாக தயார் செய்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 14 ஆவணம் முறையான அதிகாரியிடம் இருந்து பெறாததால் அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ 10ன்படி தாந்தோனிபிள்ளையுடன் கூட்டு உரிமையாளர்களாக உள்ள பிரதிவாதிகளை காட்டாமல் தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 11 ஆவணம் உண்மையானதாக இருந்திருந்தால் வழக்கு தாக்கல் செய்த போதே ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் தற்போது பின் யோசனையின் பேரில் உருவாக்கி பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு A, B அட்டவணை சொத்துக்களில் என் தாயாருக்கோ என் தகப்பனாருக்கோ தனிப்பட்ட எந்த உரிமையும் இல்லாததால் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)